Arimā Nōkku

# அரிமா நோக்கு

5:1 ஏப்பிரல் 2011

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
5:1 ஏப்ரல் 2011

தமிழ் எழுத்துருச் சீர்மை
- வ. ஜெயதேவன் 03
தமிழ் மொழியை மைய அரசின் ஆட்சிமொழியாக ஆக்குவது எப்படி? 04
- அ. இராமசாமி
Stylistics and Discourse analysis: A Contribution in analyzing literature -Zulfiqar Ahmad 10
நூல் உருவாக்கம்
- செ. வை. சண்முகம் 14
அடியார்களின் தொண்டு நெறி
- சி. வெற்றிவேலன் 18
சகல்லகலாவல்லியிடம் குமர குருபரர் வேண்டுவன 21
- தி. கமலி
Why Study Literature?
-Richard van de Lagemaat 24
வினா-விடை
- சோ. ந. கந்தசாமி 26
இராமானுஜ காவியத்தில் உவமை 30
- ச. இராஜ்குமார்
ஆட்சி மொழியாகத் தமிழ்
-வா.செ. குழந்தைசாமி 39
ஒப்பியலும் தமிழியலும் ஒருங்கிணைந்த பேரறிஞர் கா. செல்லப்பர்
- தமிழண்ணல் 43
யாப்பியல் நோக்கில் சிலப்பதிகாரம்
- ம.வே. பசுபதி 49
பாயிரம் மறுவாசிப்பு
- மா. இரமேஷ் 55
வெர்ஜினியா உல்ப்
- இரா. பிரேமா 60
இந்தியாவில் எழுதப்பட்ட முதல் சுயசரித்திரம் துபாஷி ஆனந்தரங்கப்பிள்ளை 64
- சா. கந்தசாமி
மற்றும்
நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## இதையாவது செய்யுமா இந்தியா?

இன்னும் கூட உலகெங்கும் உள்ள தமிழர்களும், தாய்த்தமிழகத் தமிழர்களும் கண்ணீர்த் துளிகளிலிருந்தும், துயரம்கப்பிய நினைவுகளிலிருந்தும் மீளவில்லை; ஈழத்தில் தமிழின அழிப்பை இலங்கைச்சிங்கள இனவாத அரசு நடத்தி முடித்து இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இலங்கைத் தமிழர்களுக்கு இருள்மட்டுமே விதியா, ஒளி ஒருபோதும் இல்லையா என்கிற வேதனை வினாக்கள் விடைபெறாமல் காலம் நகர்ந்துகொண்டிருக்கிறது: கூடவே கொந்தளிப்பில் ஏற்படுகிற ஆதங்கம்-சிங்கள அரசு செய்தது தவறு என்று மனச்சான்று படைத்த உலகின் சார்பில் ஒருமித்த குரல் எழவே எழாதா?

இந்நிலையில் 25-4-2011 அன்று சிறீஇலங்கா குறித்த ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவந்தது. தாய்த்தமிழக மக்களும், உலகெங்கும் பரவி வாழும் தமிழ் மக்களும் சொல்லி வந்ததை வழிமொழிவதாகவே அவ்வறிக்கை இருந்தது. 19-5-2009 முடிவடைந்த ஈழப் போரில் ஈழத் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில், பச்சைப்படுகொலை செய்யப்பட்டது உண்மையே என்று அவ்வறிக்கை அதிபர் இராசபட்சே அரசு நடத்திய வன்கொடுமையை உலகிற்கு ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறது.

இறுதிக்கட்டப் போரின்போது மட்டும், ஏறத்தாழ ஓர் இலக்கம் தமிழ்மக்கள், ஈவு இரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டனர். பள்ளிகள், மருத்துவ மனைகள், குழந்தைக்காப்பகங்கள், மனிதநேய நிறுவனங்கள் என்று போரோடு எத்தகைய தொடர்பும் இல்லாதவையெல்லாம் சிங்களப் படையினரின் வெறித் தாக்குதல்களில் சிதைந்தன: அழிந்தன. உள்நாட்டில் இடம்பெயர வைக்கப்பட்ட மக்களையும் போராளிகளாயிருப்பர் என்ற ஐய வட்டத்திற்குள் கண்டறியப் பட்டவர்களையும், அடிப்படை மனித உரிமைகளை மீறி-வதைகளுக்கு உட்படுத்தினர். வன்முறைக்கும், பாலியல் வன்புணர்ச்சிக்கும் உட்படுத்தப்பட்டு எண்ணற்ற தமிழ்ப்பெண்கள் கொலை செய்யப்பட்டனர். போரை எதிர்த்துக் குரல் கொடுத்த நடுவுநிலையாளர்களும், ஊடகத்துறையினரும் அடக்கி ஒடுக்கப்பட்டனர்; கொலை செய்யவும்பட்டனர், இலங்கை அரசு 'போரில்லாப் பகுதி' என்று கூறிவந்த பகுதிகளுக்குள் நம்பிக்கையோடு பாதம் பதித்தவர்கள் மீது சிங்களப்படை எறிகணைத் தாக்குதல் நடத்தியது. போர் முடிந்தபிறகு, போரின் விளைவுகளுக்கு உள்ளானவர்களுக்கு, உணவு, குடிநீர், மருந்துகள், மருத்துவ உதவிகள், ஒன்றுமே கிடைக்காதபடி இலங்கை அரசு தடுத்துள்ளது. இத்துயர்நிரல் பட்டியல் - ஒருபக்க இருபக்க அளவுக்குள் அடங்கிவிடக் கூடியதன்று.

இலங்கையின் இனவாத அரசு, கடந்த அறுபது ஆண்டுகளில் இயற்றிய சட்டங்கள் பலவற்றால், கல்வி, தொழில், அரசியல், வேலைவாய்ப்பு என அனைத்துத் துறைகளிலும், தமிழினம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஒடுக்கப்பட்ட தமிழர்கள் உரிமை மீட்புக்கெனத் தேவை ஏற்பட்டதாலேயே போராட்டத்தைத் தொடங்க வேண்டியதாயிற்று. முதல் முப்பது ஆண்டுகள் அறவழிப் போராட்டங்களை நடத்தினர்; கண்ணீரை, கவலையை மாற்ற முடியவில்லை. சிங்கள அரசோடு அறமொழியில் பேசிப்பயனில்லை என்று கண்டபிறகுதான் ஆயுதமொழியை ஈழத்தமிழ் இளைஞர்கள் தெரிவு செய்தனர். ஈழத்துப் பெரியவர்கள், பெண்கள், ஆண்கள் எல்லாருமே போராளிகளாகிவிட்ட தம் பிள்ளைகளை, பெண்களை ஆதரித்தனர். இதுதான் ஈழத்தமிழ்ப் போராட்ட மையக்கரு.

→

இப்போது இந்திய அரசு உட்பட, உலகின் வல்லரசுகள், மற்றும் மக்களுக்காக உரிமைப்போர்களை நடத்தி விடியலைக் கீறியெடுத்த வீரமிக்க சீனம், உருசியம் என்ற புரட்சி முகம் கொண்ட நாடுகள், மூன்றாம் உலகநாடுகளுக்கு உந்துசக்தி யாக இருந்த கியூபா, பெரு, வெனிசுவேலா, என்றுவரும் பெயர்ப்பட்டியலில் கொண்ட இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்துமே ஈழத்தமிழினம் அழிக்கப்படுவதைத் தடுத்த நிறுத்த முன்வரவில்லை; சிங்கள அரசுக்கு நேர்முக, மறைமுக ஆதரவாகவே இருந்து கொடும்பழி சுமந்தன.

இப்போதாவது, ஐ.நா. அறிக்கையை ஏற்று, போர்க்குற்றவாளியாகச் சிங்கள அரசை, அதன் அதிபர் இராசபட்சேயை இனங்கண்டு, உலக நாடுகள் கண்டிக்கவும் தண்டிக்கவும் முன்வர வேண்டும்.

இந்தியா, இப்போது ஐ.நா. பாதுகாப்பு அவையின் தற்காலிக உறுப்பினராக இருந்து வருவதால் - தனது வலுவைப் பயன்படுத்தி, ஐ.நா. அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திட ஆவனசெய்ய வேண்டும் இந்திய பெருநாட்டின் ஒரு தேசிய இனமாக இருக்கும் தமிழர்களும், எஞ்சியுள்ள ஈழத்தமிழர்களும், உலகெங்கும் உள்ள தமிழர்களும், நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர். இதையாவது செய்யுமா இந்தியா? ♦


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


## கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/— | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/— | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/— | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/— | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 15, 000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 10, 000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 3, 000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 1, 500 |

**தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி விளம்பரம் செய்ய முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.**


அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com

செல்: 9380626448